# கட்டான பிரதேச சபை
# கம்பஹா மாவட்டம்

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 மார்ச் 30 ஆம் திகதியும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2013 ஏப்ரல் 30 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட எனது அறிக்கையில் காண்பிக்கப்பட்ட கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட கட்டான பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் எஞ்சிய ஆயுர்வேத மருந்துப்பொருள் இருப்புப் பெறுமதியான ரூபா 338,179 தொகை கணக்கிடப்பட்டிராததுடன் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்ட மருந்துகளின் பெறுமதியான ரூபா 1,110,336 தொகை வருமானச் செலவினக் கணக்கிற்கு அறவிடப்படுவதற்குப் பதிலாக ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளின் பெறுமதியான ரூபா 992,000 தொகை வருமானத்திற்குப் பதிவளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்குனர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 827,776 தொகையில் வழங்குனர்களுக்கு முன்னர் செலுத்தப்பட்டிருந்த ரூபா 182,947 தொகை கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தமையால் பொது வழங்கல் கடன்கொடுத்தோர்

மீதியும் பொது வழங்கல் கடன்பட்டோர் மீதியும் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 39 உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஊழியர் பிணையும் திரண்ட நிலுவையாகக் காணப்பட்ட வட்டிக் கூட்டுத்தொகையுமான ரூபா 78,480 தொகையும் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 தொங்கல் கணக்குகள்**

பல வருட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 37,092 தொகையான தொங்கல் கணக்கு மீதியினைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,549,660 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 110,451,062 ஆக இருந்தது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

சேகரிக்கப்படும் சகல பணமும் நாளாந்தம் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு பிரதேச சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் கட்டான உப அலுவலகத்தின் நாளாந்தப் பெறுவனவுகளில் ரூபா 10,000 தொகையிலிருந்து ரூபா 108,000 வரையான தொகை 03 நாட்களிலிருந்து 15 நாட்கள் வரையான காலமாக 21 சந்தர்ப்பங்களின் போது வங்கியில் வைப்புச் செய்யப்படாது கையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. ரூபா 111,561 முதல் ரூபா 1,163,171 வரையான பணத் தொகை 15 முதல் 76 நாட்கள் வரையான காலமாக 11 சந்தர்ப்பங்களின் போது பிரதேச சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது உப அலுவலக சேகரிப்புக் கணக்குகளில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையின் மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 வீத வரி

சபையின் நிலுவை வீதவரிக் கட்டணத்தை அறவிட்டுக்கொள்வதற்காக 2011 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத்திட்டத்தின் பிரகாரம் வருமான உருவாக்கம் பின்வருமாறு மதிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 17,626,693 தொகையான நிலுவை வீதவரி 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 23,460,922 தொகை வரை அதாவது 33% ஆல் அதிகரித்திருந்தது.

| வருமான உருவாக்கம் | மதிப்பீட்டின் பிரகாரம் | உள்ளபடி யானது | |
|---|---|---|---|
| ஆதன இடைநிறுத்தலுக்கான ஆணைச்சீட்டு அனுப்புதல் | 35 | 03 | (இது பணம் செலுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது. |
| இடைநிறுத்தப்பட்ட ஆதனங்கள் தொடர்பான அறிக்கையிடல் | 123 | - | |
| இடைநிறுத்தப்பட்ட மற்றும் விற்பனைக்காக உள்ள ஆதனங்கள் தொடர்பான விளம்பரம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் | 60 | - | |

### 2.3.3 பெறவேண்டிய கணக்குகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,877,614 தொகையான முற்கொடுப்பனவு மீதிகளில் 3 முதல் 15 ஆண்டுகள் வரையான பழைய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,705,914 ஆக நிலவிய போதிலும்

அவற்றைத் தீர்த்து வைப்பதற்கோ அல்லது தீர்த்துவைக்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

இலங்கை அரசாங்கப் பொறியியற் கூட்டுத்தாபனத்தால் ஹியும் குழாய்கள் பெறப்படுவதற்காக 2010 யூன் 02 ஆம் திகதி ரூபா 57,450 தொகை செலுத்தப்பட்டு கட்டளையிடப்பட்டு ஒன்றரையாண்டுகள் கடந்திருந்த போதிலும் தருவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 தாமதமான செயற்திட்டங்கள்

பின்வரும் விபரங்கள் குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்களின் நிர்மாணிப்பிற்காக பல வருடங்கள் கடந்திருந்த போதிலும் அவற்றின் நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | செயற்திட்டப் பெயர் | மதிப்பீடு | நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு | 2011.12.31 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட செலவினம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | | ரூபா |
| (i) | கோவின்ன சமூக நிலைய நிர்மாணிப்பு | 2,000,000 | 2010 | 1,023,331 |
| (ii) | உதம்மட சமூக நிலைய நிர்மாணிப்பு (பழைய) | - | 2003 | 421,291 |
| (iii) | உதம்மட சமூக நிலைய நிர்மாணிப்பு (புதிய) | - | 2008 | 4,274,059 |

## 2.6 மல்பெரிவத்தை நீர்த் திட்ட நிர்மாணிப்புகள்

கட்டான பிரதேச சபையின் அதிகார எல்லையின் தெற்கு கதிரான கிராம உத்தியோகத்தர் பிரிவின் 820 குடும்பங்களின் நீர்த் தேவைப்பாடு பூர்த்திசெய்யப்படும் வகையில் முறையான நீர் வளமொன்றை

நிர்மாணிப்பதற்காக $40m^3$ தாங்கி ஒன்றை நிர்மாணித்து பிரதேசம் முழுவதற்கும் குழாய்களை ஸ்தாபிப்பதற்காக 2010 ஆம் ஆண்டின் போது செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் 178 (2)(2)(ஈ) இன் பிரகாரம் கேள்வி சமர்ப்பிக்கப்படுவதற்காக இரண்டு கிழமைகளுக்குக் குறையாத காலம் வழங்கப்பட வேண்டிய போதிலும் விலைக் கோரல்கள் தொடர்பாக 2010 ஒக்டோபர் 25 ஆம் திகதி வெளியான பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் விலைகூறல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதி நவம்பர் 04 ஆம் திகதியானமையால் விலைகள் சமர்ப்பிக்கப்படுவதற்கு வழங்கப்பட்டிருந்த காலம் 11 நாட்கள் மாத்திரமேயாக இருந்தது.

(ஆ) 2010 திசெம்பர் 08 ஆம் திகதி ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தக் காலம் 03 மாதங்களாக இருந்ததுடன் மேலும் 02 மாதங்களால் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 2011 மே 08 ஆம் திகதி வேலை பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் பௌதீக ஆய்வுத் திகதியாகிய 2013 சனவரி 23 ஆந் திகதியளவிலும் துறை வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) கணக்காய்வுத் திகதியாகிய 2013 சனவரி 23 ஆம் திகதியளவில் துறையின் பூர்த்தித் திகதி தாமதக் காலம் 01 வருடமும் 08 மாதங்களும் கடந்திருந்த போதிலும் உடன்படிக்கையின் 4 ஆவது நிபந்தனையின் பிரகாரம் தாமதமாகும் ஒரு வாரம் அல்லது அதன் பகுதிக்கு ரூபா 600 தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இச் செயற்திட்டம் தொழிற்துறைத் தகைமைவாய்ந்த உத்தியோகத்தர்களால் கண்காணிக்கப்பட்டமைக்கான சான்றுகள் இருக்கவில்லை.

## 2.7 செயலாற்றல்

"மக நெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2011" இன் கீழ் சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் 12 வீதிகள் இணைத் தொடர்புக் கொங்கிரீட் துண்டுகள் இடப்படும் 16 செயற்திட்டங்களுக்காக ரூபா 8,000,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்